ஸ்ரீகுருப்யோ நம :

# ஸ்ரீகுருப்ரகாசம்

**சுடர் 8**

## ஸ்ரீசிதானந்தரின் நித்ய பதவி

ஸ்ரீகுரும் பரமானந்தம் வந்தே ஆனந்த விக்ரஹம் !
யஸ்ய ஸந்நிதி மாத்ரேண சிதானந்தாயதே மன: –குரு கீதை – 3–52
எவருடைய ஸந்நிதி மாத்ரத்தால் மனமானது சிதானந்தமயமாகிறதோ. எவர் ஆனந்தமே வடிவமாக உடையவரோ அந்த பரமானந்த குருவை வணங்குகிறேன்.

தேஹ பாவேன் தாஸோஸ்மி ஜீவபாவே த்வதம்சக :
ஆத்ம பாவே த்வமேவாஹம்.!! …………ஸ்ரீசங்கரபகவத்பாதர்
When I Consider my body, I am your servant. When I Consider my mind, I am part of you. But I Consider my Athman, you and I are one………….Sri Sankarar.

### 1. கர்மயோகம்

ஸ்ரீகுருநாதர் தன் பணியினை சென்னை நகரில் மட்டும் செய்யவில்லை. "ஆஸேது ஹிமாசல பர்யந்தம்" என்ற மொழிக்கிணங்க. ராமேஸ்வரம், கன்யாகுமரி, திருவனந்தபுரம், ஸ்ரீகுருவாயூர், திருச்சி, தஞ்சாவூர், உத்தமதானபுரம் (பாபநாசம்), கும்பகோணம். இஞ்சிக்கொல்லை, புதுக்கோட்டை, விடயல்கருப்பூர், நாகரசன்பேட்டை, சாந்தவெளி, ஹைதராபாத், திருவாரூர், நாகப்பட்டிணம், சிக்கல், மாயவரம், திருவிடைமருதூர், திருக்கடவூர், மதுரை, திருநள்ளாறு, பாஸ்கரராஜபுரம், சிதம்பரம், கடலூர், திருவண்ணாமலை, விஜயவாடா. ராஜ்கோட், ராஜமஹேந்திரபுரம், பம்பாய், அஹமதாபாத், அலஹாபாத், காசி, பீஹார், பாகல்பூர், புவனகிரி (AP) பத்ராசலம், கல்கத்தா, அஸ்ஸாமில் காமாக்யா. டெல்லி என்ற படி சுற்றியிருக்கிறார்கள்.

அஸ்ஸாமில் உள்ள காமாக்யா க்ஷேத்ரத்துக்கு ஸ்ரீகுருநாதர் தன் நண்பர் டாக்டர் தவே என்பவருடன் 01–04–1958–ல் சென்றிருக்கிறார். அவ்விடம் ஸந்நிதியில் – ஸப்தசதித்பாராயணமும் பூஜையும் செய்திருக்கிறார்கள். அங்கே யோனிகுண்டதர்சனம் முக்கியம். அதில் ஸத்குருநாதருக்கு விசேஷமான தர்சனத்தை ஸ்ரீதேவீ காட்டியிருக்கிறாள். இவ்விஷயங்களை அவர்களே தன் டைரியில் கைப்பட எழுதி வைத்துள்ளார்கள்.

இந்தியாவின் பல இடங்களுக்கு ஸ்தல தர்சனமாகவும், ஸாதகர்களுக்கு சாந்தி கர்மா, சண்டி ஹோமம், ஸப்தசதீ பாராயணம் இவை செய்வது முகமாகவும் சென்று வந்துள்ளார்கள். ஆங்காங்கே மந்த்ர உபதேசமும் சிலருக்கு செய்துள்ளார்கள். பிரதி சரத் நவராத்ரி மற்றும் வஸந்த நவராத்ரி இரு காலங்களிலும், ஸ்ரீசிதானந்தருடனும், அவர் குறிப்பிட்ட இடங்களிலும், தன் சிஷ்யர்களின் வீடுகளிலும், தன் க்ருஹத்திலும் பூஜை ஹோமங்கள் நடத்தினார்கள். இதுவரை 313 தங்க சாலை தெருவில் வாடகை வீட்டில் இருந்தவர்கள், 1967 ஜனவரி முதல் சூளைமேடு க்ருஷ்ணாபுரத்தில் புதிய வீடு சொந்தத்தில் வாங்கி அதில் குடியேறினார்கள். ஸ்ரீமுத்துஸாமிதீக்ஷதரின் ஜன்மதினமான பங்குனி கார்த்திகையில் ஆண்டு தோறும் மயிலையில் – தியாகப்ரஹ்ம வித்வத்ஸபாவில் நவாவரண பூஜை செய்து வந்தார்கள்.

## 2. நித்ய பதவி

ஸ்ரீவித்யா உலகின் சிகரமாய் விளங்கியவர், தென்னாட்டில் தேவிவழிபாட்டை சீர்படுத்தியவர், அனைவரும் அனுஷ்டிக்கத்தக்க வழியில் பத்ததிகளை ஆக்கிக் கொடுத்தவர், ப்ரஹ்மவித்யா மார்க்கத்தை தவறாது கடைப்பிடித்து வாழ்ந்தவர், பல நூற்றுக்கணக்கான ஸ்ரீவித்யா பரம்பராசீடர்களை ஏற்படுத்தியவர். ஸ்ரீசிதானந்தநாதர் அவர்கள். தன் பணி முடிந்ததெனக்கருதியோ என்னவோ 28 9. 1957ல் – (தமிழ் ஆண்டு ஹேவிளம்பியில்) விதேஹ கைவல்யம் எய்தினார்கள். அந்த நேரம் ஸ்ரீசரத் நவராத்திரி சமயம். குருதேவேந்திரர் சென்னை – சௌகார்பேட்டையில் ஸ்ரீDr. தவே அவர்கள் வீட்டில் நவராத்ரி பூஜையில் இருந்தார். உடன் – பழவந்தாங்கல் சென்று தன் குருநாதருடைய – இறுதி ஸமஸ்க்காரங்களில் கலந்து கொண்டு விட்டு வந்தார்கள். ஸ்தூலமாக ஸ்ரீகுருநாதரை இனி தரிசிக்க முடியாவிட்டாலும் சாஸ்த்ரத்திலுள்ளபடி – ஸ்ரீகுருவும் சிஷ்யனும் வேறு வேறு இல்லை. ஒன்றே என்பதை உணர்ந்து அனுபூதி எய்தினார்கள். அன்றே – தன்குருநாதர் நித்யாஸ்வரூபமாக – சித்துடன் கலந்துவிட்டார் என்பதைக்கண்டு – அதாவது அசரீரியான குரல் இவருக்குக் கேட்டு ஸ்ரீநித்யா ஸ்தோத்ரம் என்ற துதியை இயற்றினார்கள். அதற்கிடையிலேயே சரமஸ்லோகமும், பூர்ணத்வநிலை குறித்தும் எழுதியுள்ளார்கள். அது பிற்காலத்தில் அச்சாகியுள்ளது. ஸாதகர்களின் பூஜைக்கு இந்த நித்யா ஸ்தோத்திரம் நிச்சயம் உறுதுணை செய்யும். எனவே அதனை இங்கு எழுதுவது அவசியமே எனக்கருதி எழுதப்பட்டுள்ளது.

## ஸ்ரீநித்யாஸ்தோத்ரம்

காமேச்வரீம் காமிததாம் மதீயநாதஸ்ய நித்யஸ்வபத ப்ரதாத்ரீம்!
காமாரிகாமப்ரத ஸுந்தராங்கீம் அகாரரூபாம் ப்ரணமாமி நித்யாம்!!
பகஸ்வரூபாம் பகினீமமோதாம் ஸம்க்ஷோபயந்தீமகிலாம்சசத்வான்!
க்லின்னத்ரவாம் ஸ்ரீபகமாலினீம்தாம் ஆகாரரூபாம் ப்ரணமாமி நித்யாம்!!
மதீய தாபேந்துமஜாம் ச நித்யக்லின்னாம் மதந்தஸ்த தமோப ஹந்த்ரீம்!
மதத்ரவாம் மத்குலபத்மவாஸாம் இகாரரூபாம் ப்ரணமாமி நித்யாம்!!
தாம்பத்மினிமீமிதி மந்த்ரலக்ஷ்யாம் பேருண்டகாம் பேதவிஹீனரூபாம்!
சாருஸ்வரூபாம் சருஹோம துஷ்டாம் ஈகார ரூபாம் ப்ரணமாமி நித்யாம்!!
ஸம்ஸாரகாந்தரா தவாக்னிரூபாம் ஸம்ஸாரபூதாம் ச்ருதிவாக்ய ராசே:!
ஸுரோத்தமேட்யாம் வரவஹ்னி வாஸாம் உகாரரூபாம் ப்ரணமாமி நித்யாம்!!
வஜ்ரேச்வரீம் வஜ்ரதரேந்த்ரமந்த்ரலக்ஷ்யாம்! வஸிஷ்டாதி மஹர்ஷி பூஜ்யாம்!
வரிஷ்டமன்னாத ஸுகப்ரதாத்ரீம் ஊகார ரூபாம் ப்ரணமாமி நித்யாம்!!
சிவதாமீஸ்வரவாயு பூதாம் சிவாக்ய மஞ்சஸ்த பதாரவிந்தாம்!
சிவங்கரீம் தாம் சிவதூதி காக்யாம் ருகாரரூபாம் ப்ரணமாமி நித்யாம்!!
துரீயவித்யா ஜப தத்பராணாம் பலப்ரதாத்ரீம் த்வரிதம் நராணாம்!
நரேந்த்ர பூஜ்யாம் த்வரிதா ஹ்வயாம் தாம் ரூகாரரூபாம் ப்ரணமாமி நித்யாம்!!
அதஸ்ஸஹஸ்ராரகுலாம் புஜாதாச் ச்ரி ப்ரஹ்மரந்த்ரஸ்த ஸரோருஹாம்தம்!
ஸதாசரந்தீம் குலஸுந்தரீம் தாம் லுகாரரூபாம் ப்ரணமாமி நித்யாம்!!
யா த்வாதசார்தாமனுரூப தர்த்ரிம் நித்யாஹ்வயா நாதஸுகப்ரதாத்ரீம்!
நித்யோத்ஸவா நித்யஸுக ப்ரதாத்ரீம் லூகாரரூபாம் ப்ரணமாமி நித்யாம்!!
நீலாம்பராம் நீலசரீர காந்திம் சத்ரோர்ஜயே நீலபதாக யாட் யாம்!
நீலாம்பரஸ்ய ப்ரியஸோதரீம் தாம் ஏகாரரூபாம் ப்ரணமாமி நித்யாம்!!
ஜய ப்ரதாம் ஸ்ரீவிஜயாத்ம போத ஸௌக்ய ப்ரதாம் மோக்ஷவிதான தக்ஷாம்!
ஜயாதிரூபாம் விஜயாமஜேயாம் ஐகாரரூபாம் ப்ரணமாமி நித்யாம்!
வேதாந்த லக்ஷ்யா ஸ்ருதிஸாரபூதா யாம்ருக்யதே ஸம்யமிபிர்முனீந்த்ரை:
ஸுக்ஞானதாம் ஸர்வஸுமங்களாம் தாம் ஓகாரரூபாம் ப்ரணமாமி நித்யாம்!!
யா ஜாதவே தோஜ்ஜ்வலினி ச பூதஸம்ஹாரிணி ப்ரஜ்வலமாலயாட்யாம்!
தாமக்னிரூபாம் பரதேவதேவீம் ஔகாரரூபாம் ப்ரணமாமி நித்யாம்!!
யாஸர்வ பூதேஷு சிதிஸ்வரூபா சித்ராஹ்வயா த்ரேயதனுர்விசித்ரா!
பவித்ரிதா ஸேஷ ஜகத்தலாம் தாம் அம்காரரூபாம் ப்ரணமாமி நித்யாம்!!
யாபஞ்சதஸ்யாத்மக மந்த்ரரூபா பஞ்சோபசார ப்ரிய மானஸாம்பா
பஞ்சாக ஹந்த்ரீ மஹதீம் சிவாம் தாம் அ:காரரூபாம் ப்ரணமாமி நித்யாம்!!
ஸமர்பிதம் நித்யபதே ஸ்திதஸ்ய மத்ஸத்குரோ: பாதஸரோஜயுக்மே!
ஆக்ஞாவஸான் மாதுரனந்த போத ஸுகப்ரதம் ஸ்தோத்ரமிதம் ஸுபக்த்யா!!